# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

## MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


## மிகவும் அவசரம்

தேதி :

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களுக்கு எங்களது அன்பான வணக்கம். நாம் இப்பொழுது இக்கட்டான நிமைக்கு தள்ளப்பட்டு வருகின்றோம்.

நமது துறை ஆணையர் அவர்கள் 08.03.19ம் தேதி நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் வரும் 01.04.2019ம் தேதி முதல் வாகன் சாப்ட்வேரை உபயோகித்து சான்றிதழ் வழங்க வேண்டுமென்று கூறினார்கள். அதற்குரிய சாப்ட்வேர் உபயோகிக்கும் முறையை விளக்கம் தருவதாகவும் கூறினார்கள். ஆனால் அந்த வாகன் பற்றிய செய்முறைகளை நமக்கு செய்து காண்பிக்கவில்லை.

இவ்வாறிருக்க 01.04.2019ம் தேதி முதல் வாகன் இணையதளத்தை உபயோகித்து நாம் செய்ய இயலாத நிலையில் நாம் உள்ளோம்.

சென்னையில் ஒரு சில வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் வாகன் இணையதளத்தை செய்து பார்த்துவிட்டு வருவதாக கூறுகின்றார்கள்.

அவை யாவும் கம்ப்யூட்டர் அளவில் தான் செய்முறையை செய்துள்ளனர். வாகனத்தை வைத்து வாகன் இணையதளத்தில் செய்முறை செய்யவில்லை.

அதை மேற்கோள் காட்டி நமது ஆணையர் அவர்கள் தமிழகம் அனைத்தும் வாகன் இணையதளத்தை பயன்படுத்தி தான் புகைச்சான்றிதழ் வழங்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

ஆனால் வேறு எந்த மாவட்டத்திலும் வாகன் இணையதளம் சரியாக செயல்படவில்லை.

நமது உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு பகுதியாக செயலமுறை விளக்கம் செய்து காண்பிப்பதாக கூறினார்கள். அதையும் நமக்கு செய்து காண்பிக்கவில்லை.



Scanned by CamScanner

மரக்கன்றுகள் நடுவோம்! மரம் வளர்ப்போம்!! மழைபெறுவோம்!!!

# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

## MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)


767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


வரும் 01.04.2019ம் தேதி நம்மிடம் உள்ள பழைய சாப்ட்வேர் புகைச் சான்றிதழ்களை பெற முடியாது என்று மறுத்தால் நாம் அனைவரும் (02.04.2019ம் தேதி நமது மையங்களை அடைத்துவிட்டு) 01.04.2019ம் தேதி மாலை சென்னைக்கு புறப்பட்டு 02.04.2019ம் தேதி நமது ஆணையர் அவர்களை சந்திக்க வேண்டும்.

ஆகவே அனைத்து உறுப்பினர்களும் 01.04.2019ம் தேதி மாலை 5.00 மணிக்கு தகவல் வந்தவுடன் நாம் அனைவரும் சென்னை செல்ல வேண்டும் என்பதை தங்களுக்கு முன்கூட்டியே இத்தகவலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாம் அனைத்து உறுப்பினர்களும் நேரடியாக ஆணையர் அவர்களை அவசியம் சந்திக்க வேண்டும். அப்பொழுது தான் நமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்து (150 நபர்கள்) ஆணையர் அவர்கள் கால அவகாசம் கொடுப்பதற்கு முடிவெடுப்பார்கள். இல்லையென்றால் குறைந்த எண்ணிக்கையில் இருந்தால் (50 நபர்கள்) நமக்கு கால அவகாசம் கிடைப்பது சந்தேகத்திற்கு உரியதாகிவிடும்.

மீண்டும் உங்களிடம் நாங்கள் பணிவன்புடன் கேட்டுக் கொள்வது அனைவரும் சென்னைக்கு புறப்படுவதற்கு தயார் நிலையில் இருக்கவும்.

இது நம்முடைய வாழ்வாதார பிரச்சனை ஆகும்.

நன்றி

**மதுரை**
**30.03.2019**

**தலைவர்**

மாசுபடுவதை குறைப்போம்! நோயற்ற வாழ்வு வாழ்வோம்!!
Control Pollution for Healthy Living

Scanned by CamScanner